


இன்றைய நாளில் போர் மற்றும் பயங்கர ஆபத்துக்களிற்குட்பட்டு இடம் பெயர்ந்து அகதிகளாக வாழும் மக்கள், துன்புறுத்தல்களால் பலவந்தப்படுத்தப்பட்டு தப்பிச் சென்றவர்கள் ஆகியோரிற்காக ஜெபிப்பதற்காக நாம் உலகமெங்கும் பரந்துள்ள சபைகளுடன் இணைந்திருக்கின்றோம். இன்று 33 மில்லியனிற்கும் அதிகமான மக்கள் வீடு என்று அழைப்பதற்கு ஒரு இடமில்லாது இருக்கின்றார்கள். இவர்கள் தங்களது குடும்ப அங்கத்தவர்களையும், நண்பர் களையும், சொத்துக்களையும் இழந்து எந்தவித எதிர்பார்ப்புக்களுமின்றி வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

"பசியாயிருந்தேன் எனக்குப் போஜனங் கொடுத்தீர்கள், வியாதியாயிருந்தேன் என்னை விசாரிக்க வந்தீர்கள், காவலிலிருந்தேன் என்னை பார்க்க வந்தீர்கள் என்பார். அவர் அவர்களிற்கு பிரதியுத்தரமாக மிகவும் சிறுவர்களாகிய இவர்களில் ஒருவனிற்கு நீங்கள் எதைச் செய்யாதிருந்தீர்களோ அதை எனக்கே செய்யாதிருந்தீர்கள் என்று மெய்யாகவே உங்களிற்குச் சொல்லுகிறேன் என்பார்." (மத்:25-35, 40)

தயவு செய்து ஜெபியுங்கள்

* அரசாங்கம் இடம் பெயர்ந்துள்ள மக்கள் மீது அனுதாபத்துடன் கருணை காட்டவும், அவர்களது மீள்குடியேற்ற துரித நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவும்.
* துன்பப்படுத்துகிறவர்களும், மக்களை இடம் பெயரச்செய்யும் நடவடிக்கைகளில் ஈடுப்படுகிறவர்களும் அவர்களின் செயல்களை விட்டு விலகவும்.
* சபை மற்றும் இதர பணியாளர்களின் பாதுகாப்பிற்காகவும், அவர்களின் பணிப் பழுவினால் சோர்ந்து போகாமல் உற்சாகமாய் இருக்கவும், கிறிஸ்துவின் அன்பை அங்குள்ளவர்களுக்கு சொல்ல தகுந்த தருணம் கிடைக்கவும்.
* துன்புறுத்தலுக்கு பயந்து இடம்பெயரும் அகதிகளின் உள்ளங்களில் சமாதானம் நிலைக்கவும், அவர்களை அன்பால் அணைத்து ஏற்றுக்கொள்ளும் உள்ளங்கள் கிடைக்கப்பெறவும், களைப்படைந் தவர்கள் தேவனில் ஆறுதலை கண்டடையவும்.



